**சகல திருச்சபை குருமார்களுக்கும் பொது நிலைத் தலைவர்களுக்கும்.**
**அன்புக்கு பாத்திரமானவர்களே,**

நாம் நத்தார் விழாக் கொண்டாட்டங்களுக்காக துரிதமாக தயாராகி வருகின்றோம். பாரம்பரியமாக நத்தார் விருந்துபசாரங்கள், கரோல் கீதங்கள், நாடகங்கள் மற்றும் ஏனைய விழாக்கள் தொடர்பில் நாம் அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றோம். அதேபோல், அவசர அவசரமாக விற்பனைக் கூடங்கள், கடைகள், இரவு விருந்துபசாரக் கொண்டாட்டங்கள், விலை உயர்ந்த அலங்காரங்கள், சொகுசு வியாபாரப் பண்டங்கள், கேக் மற்றும் கேக் தயாரிப்புக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக செயல்படுகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் தெரிந்தோ தெரியாமலோ வெளி அலங்காரங்களுக்கு ஈர்க்கப்பட்டு நத்தார் விழாவின் உண்மையான விழுமியங்களினின்று அன்னியப்பட்டு லௌகீக ஆசைகள் மற்றும் கொண்டாட்டங்களின்பால் கவரப்பட்டு விடுகிறோம்.

கிறிஸ்துவின் திரு அவதாரம் சகல மனிதர்களுக்குமான ஆண்டவரின் உன்னதமான தியாகம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாவச் சுமைகளினின்றும் அடிமைத்தனத்தினின்றும் எம்மை மீட்பதற்காக ஆண்டவர் தமது மகிமையையும் பலத்தையும் அதிகாரத்தையும் கைவிட்டு மாட்டுத் தொழுவதில் அவதரித்தார். கிறிஸ்து பிறப்பிலே ஆண்டவரின் அர்ப்பணிப்பும் தாழ்மையும் உன்னதமான பண்புகளாக உள்ளன. ஆண்டவரின் இணையற்ற தியாகம் எமக்கு பாவ மன்னிப்பையும், வாழ்வின் பரிபூரணத்தையும் நித்திய வாழ்வினையும் வழங்குகிறது.

ஆகவே, நத்தாருக்கான எமது ஆயத்தத்தை குறித்து நாம் மனந்திறந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆண்டவர் எமக்காக செய்த தியாகத்தை நாம் புரிந்துகொண்டுள்ளோமா? எமது கொண்டாட்டங்கள் ஆண்டவர் எமக்காக செய்த தியாகத்திற்கு நிகராகுமா? கிறிஸ்துவின் பிறப்பை உண்மையான அர்த்தத்தோடு கொண்டாட வேண்டுமானால் உலகத்தால் வழிகாட்டப்படுகின்ற வியாபாரமயமாக்கப்பட்ட வீண் செலவுகளைக் கொண்ட நத்தார் கொண்டாட்டத்தால் கவரப்படாத வண்ணம் கிறிஸ்துவின் அடியாளர்களாகிய நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

நத்தார் விழாவின் உண்மையான விழுமியத்தை நினைவுகூரும்பொருட்டு சிறிது காலத்தை கழிவுக்குமாறும், பாவச் சுமையிலிருந்து எம்மை மீட்பதற்கும் இரட்சிப்பதற்கும் சகல விதமான சமூக அநீதிகளினின்றும் எம்மை விடுவிப்பதற்கும், எம்மிடையே அவதரித்துள்ள இயேசுவில் ஒன்றிக்குமாறும், அவரோடு எமது உறவை வலுப்படுத்தும்படியும் எமது விசுவாசிகள் அனைவரையும் வேண்டுகிறோம். எமது கொண்டாட்டங்கள் அனைத்தும் நாம் எதிர்பார்க்கும் விடுதலையை காணச்செய்யவும் கிறிஸ்துப் பெருமானின் பிறப்பினாலான உண்மையான சமாதானத்தை அனுபவிக்கவும், மக்களிடையே நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் நிலவ செய்ய வழிவகுக்க வேண்டும். அத்தோடு இயேசுவை தூய்மையாகவும் உண்மையாகவும் வழிபட துணைபுரிய வேண்டும்.

ஆகவே, நாம் கிறிஸ்துவின் அடியவர் அனைவரையும் விழிப்புணர்வுடன் இருக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். வியாபாரமயமாக்கப்பட்ட நத்தாருக்காக தூண்டப்படுவதிலிருந்து அவதானமாக இருங்கள். அதற்குப் பதிலாக கிறித்துவின் அவதாரத்தின் ஆன்மீக விழுமியத்தில் கவனம் செலுத்துங்கள்.

நத்தாரைக் கொண்டாடுவதற்காக மிகவும் எளிமையான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடவும், வீண் செலவுகள், களியாட்டங்கள், ஆடல், பாடல் நிறைந்த நத்தார் விழாவை தவிர்த்துக்கொள்ளவும் எமது திருச்சபை மக்களிடையே விநியோகிப்பதற்கான ஒரு பிரசுரம் ஒன்றை இணைத்துள்ளோம்.

நத்தாரின் உண்மையான விழுமியத்தைப் புரிந்துகொள்வதற்காக எம்மைத் தயார்படுத்தும்பொருட்டும், நத்தாரைக் சரியான முறையில் கொண்டாட வழிகாட்டும் பொருட்டும் நவம்பர் மாதம் 22ஆம் திகதி அல்லது நவம்பர் மாதத்தில் உங்கள் திருச்சபைக்கு வசதியான ஒரு தினத்தில் ஜெப ஒன்றுகூடலை நடாத்த வேண்டுகிறோம். வைதீக திருச்சபை முறைப்படி நத்தார் வருகைக்கான காலம் தபசுக் காலமாகவும், நோன்பையும் ஜெபத்தையும் கையாண்டு தம்மை தயார் செய்கின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ளல் சிறப்பாகும்.

எமது கொண்டாட்டங்கள் அர்த்தமுள்ளதாகவும் பொருத்தமானதாகவும் ஆண்டவரின் வருகையைச் சந்திக்க எம்மை தயார்படுத்துவதாகவும் அமையட்டும்.

இறைமகனின் நிலைவரமான நல்லாசிகள் உங்களனைவருக்கும் உரித்தாகுக!

**கையொப்பமிட்டுள்ளோர்:**

அருட்திரு. ஹேஷான் டி சில்வா- தலைவர்- இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மற்றும் இலங்கை பெப்டிஸ்ட் சங்கம்

பேராயர் அதிவண.டிலோராஜ் ஆர். கனகசபை, இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்

அருட்திரு.சமன் பெரேரா- தலைவர், இலங்கை பிரஸ்பட்டேரியன் திருச்சபை

பேராயர் கீர்த்திசிறி பெர்னான்டோ- குருநாகல மறை மாவட்டம்

பேராயர் அதிவண. அறிவர். டேனியல். எஸ். தியாகராஜா- யாழ் மறைமாவட்ட பேராயர், தென்னிந்திய திருச்சபை

அருட்திரு. ஆசிறி. பி. பெரேரா- தலைவர்/ பேராயர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை

அருட்திரு. சர்லி பேபர்- தலைவர், கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை

ஆணையாளர் மாசி யூசுப்- பிராந்திய தளபதி, இரட்சண்ய சேனை

அருட்திரு. ஜி. நடராஜா- தலைவர், இலங்கை லூத்தரன் திருச்சபை

அருட்திரு.மைக்கல் திசாநாயக்க- தலைவர், மக்கள் தேவ சபை, இலங்கை

அருட்திரு.லெஸ்லி கீகல்- தலைவர்- நாற்சதுர சுவிசேஷ திருச்சபை, இலங்கை

அருட்திரு.தே. தேவநேசன்- தலைவர், இலங்கை அமெரிக்க மிஷன் திருச்சபை

அருட்திரு.டபிள்யூ.பி. எபனேசர் ஜோசப்- பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

**ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்:**

இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA)

இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA)

கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் (SCM)

இலங்கை வேதாகம சங்கம்

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்

இலங்கை இறையியல் கல்லூரி

சத்திய வசனம்

கொழும்பு இறையியல் கல்லூரி

கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பு